P.R.NO:441

# செய்தி வெளியீடு – 14.7.2007

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேளாண்மைத்துறைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று (14.7.2007) வேளாண்மைத் துறை அமைச்சர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் மற்றும் துறைத் தலைவர்களுடன் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, தமிழகம் இதுவரை கண்டிராத மகத்தான சாதனையாக 2006–2007ஆம் ஆண்டின் உற்பத்திக் குறியீடான 95.35 இலட்சம் மெட்ரிக் டன்னை விட கூடுதலாக 98.24 இலட்சம் மெட்ரிக் டன் என உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளதற்கும், அரிசி உற்பத்தித் திறனில் எக்டருக்கு 3600 கிலோ சாதனை எட்டியுள்ளதற்கும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துப் பாராட்டியதுடன், மேலும் அதிக உற்பத்தி செய்து தொடர்ந்து சாதனைகளைப் படைத்திடத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

உணவு உற்பத்திக்குத் தேவைப்படும் இடுபொருட்களான விதை, யூரியா, பொட்டாஷ் ஆகிய உரம் தேவையான அளவு கையிருப்பில் உள்ள நிலையில் டிஏபி உரத்தைப் பொறுத்தவரை தற்போது கையிருப்பில் உள்ள 10,000 டன்னுடன், டான்பெட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 கோடி ரூபாய் நிதியின்மூலம் மேலும் தேவைப்படும் டிஏபி உரத்தினை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்குரிய பணிகளை விரைந்து நிறைவேற்றிடவும்;

விவசாயக் கடன்கள் வழங்கிட கூட்டுறவு வங்கிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1360 கோடி ரூபாய் நிதியில் இதுவரை 200 கோடி ரூபாய் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் கடன் தேவைப்படும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் கடன் வழங்கிட உரிய ஏற்பாடுகளைச் செய்திடவும்;

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டு விவசாயிகள் நட்டம் அடைவதைத் தவிர்த்திட நெல், நிலக்கடலை மற்றும் பயறு வகைகளுக்குப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 50 சதவீத மானியத்தில் 10 லட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 15 கோடி ரூபாயை உரியமுறையில் விரைவில் பயன்படுத்திடவும்;

உலக வங்கி உதவியுடன் 691.37 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தில் இவ்வாண்டிற்குரிய ஒதுக்கீடான 48.44 கோடி

ரூபாயைப் பயன்படுத்தி, பண்ணைக் குட்டைகள் மேம்பாடு, 50 சதவீத மானியத்திலான சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம் ஆகியவற்றை விரைவுபடுத்தவும், விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்க சந்தை ஒருங்கிணைப்பு, சேமிப்பு கிடங்கு வசதிகள், ஆகியவற்றை மேம்படுத்தவும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சிகளை உடனுக்குடன் அளிக்கவும் ஆவன செய்திடவும்;

டீசலுக்கு மாற்றாகக் காட்டாமணக்கு மூலம் பயோ–டீசல் தயாரித்தல், பெட்ரோலுக்கு மாற்றாக சர்க்கரைச் சோளம், சர்க்கரை கிழங்கு ஆகியவற்றிலிருந்து எத்தனால் தயார் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும்;

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், சர்க்கரை தயாரிப்பதுடன் கரும்பின் உப பொருள்களிலிருந்து மின்சாரம், எரி சாராயம், எத்தனால் மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தைச் செயல்படுத்தி, சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் இயங்கும் போக்கைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும்;

அண்மைக் காலமாக மக்களிடையே உணவுப் பழக்கத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் பயன்படுத்தும் முறை அதிகரித்துள்ளதால், தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளித்து தேசிய தோட்டக்கலை வாரியம் வழங்கியுள்ள 268 கோடி ரூபாய் மூலம் தோட்டக்கலை திட்டப்பணிகளையும், 133 கோடிரூபாய் மூலம் நுண்ணீர் பாசனப் பணிகளையும் விரைவு படுத்திடவும்;

90 சதம் மானியத்தில் 3 கோடி ரூபாய் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வரும் துல்லிய பண்ணையத் திட்டப்பணிகளை விரைவு படுத்திடவும்;

தமிழகத்தில் ஏற்கனவே நடைபெற்று வரும் உழவர் சந்தைகளை மேலும் சிறப்பான முறையில் நடத்துவதோடு; கூடுதலாக 50 உழவர் சந்தைகளை புதிதாக அமைப்பதெனவும்;

91,576 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ள 1,01,623 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாகுபடிப் பணிகளுக்கு ஊக்கமளித்து, தேவையான உதவிகளை உடனுக்குடன் நிறைவேற்றிடவும்; 50 ஏக்கருக்கு மேல் தரிசாக உள்ள பட்டா தொகுப்பு நிலங்களிலும், நில உரிமையாளர்கள் கோரிக்கை வைத்தால், அந்நிலங்களைச் சீர்திருத்தி, மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9